மேல் இம்மாதிரியான குற்றங்கள் நடக்கக்கூடாது. அதற்கு இந்த அரசு ஒரு நீதி விசாரணை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது இரு சாராருக்கும் தொடர்ந்து, அவர்களிடையே ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தின் காரணமாகவும் போட்டி, பகைமை காரணமாகவும் தொடர்கதையாக நடைபெற்றிருக்கிற சம்பவம். ஆகவே, குற்றவாளி யாராக இருந்தாலும் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால் நீதி விசாரணை இதில் தேவையில்லை.

இழப்புக்கு ஈடு கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்காக விழுப்புரத்திலே நடைபெற்றதையும் எடுத்துக்காட்டினார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்சனை முடிந்துவிடட்டும், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. க. அரங்கசாமி எழுந்தார்).

நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. க. அரங்கசாமி : நானும் கொடுத்திருக்கிறேன். என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் 41-வது விதியின்கீழ் ஒரே கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்திருந்தாலும் அவர்களில் ஒருவர்தான் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் நான் உங்களை அழைக்கவில்லை. (திரு. க. அரங்கசாமி எழுந்தார்) தயவு செய்து உட்காருங்கள். நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒத்துழையுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு இது.

[முற்பகல் 11-40]

(ஆ) கிழக்கு முகவை மாவட்டம் நெட்டூர் கண்மாய் பழுதடைந்திருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பெற்றுள்ளது குறித்து.

1979 மார்ச் 24]

*திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> ''கிழக்கு முகவை மாவட்டம், நெட்டூர் கண்மாயில் உள்ள 5-வது மடை பழுதாக உள்ளதாலும், சரியான பராமரிப்பு இல்லாததாலும், மோசமான நிலையில் இருப்பதால் சுமார் மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் உற்பத்தி குறைவு குறித்து''.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாசனத் தலைமைப் பொறியாளர் மேற்கூறிய நெட்டூர் கண்மாய் நல்ல நிலைமையில் இருப்பதாகவும், மராமத்து வேலைகள் தேவையில்லை என்றும் அறிவிதுள்ளார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 4-வது, 5-வது மடைகளை மீண்டும் கட்டுவதற்காக ரூபாய் இருபது ஆயிரம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது என அறிவிக்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெட்டூர் கண்மாயானது சுமார் 3 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கக்கூடியது. ஒரு ஏக்கருக்கு 20 மூட்டை என்று வைத்தாலும் கூட 60 ஆயிரம் மூட்டைகள் தரக்கூடிய கண்மாய் மூன்றாண்டு காலமாக நீர் பெருகவில்லை. இதற்கெல்லாம் சேர்த்து மொத்தமாகக் கணக்குப் போட்டால் 1 இலட்சத்து 80 ஆயிரம் மூட்டைகளை இந்த அரசு இழந்து இருக்கிறது. இவ்வளவு மிகப் பெரிய இழப்பு அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே 88 லட்சம் டன் உற்பத்தி செய்வதாகத் இந்த ஆண்டு திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த 88 லட்சம் டன்னை எப்படி உற்பத்தி செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. மூன்றாண்டு காலமாக தொடர்ச்சியாக அந்தக் கண்மாய் பெருகவில்லை. ஏனென்றால் அங்கே இருக்கக்கூடிய 5-வது மடை கடந்த காலத்தில் எற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அது ரிப்பேர் செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் அதே இடத்தில் ஒட்டை விழுந்துவிட்டது. ஆகவே கடந்த ஆண்டு நீர் பெருகவில்லை. மீண்டும் ரிப்பேர் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மீண்டும் இந்த ஆண்டிலேயும் அதே இடத்திலே ஒட்டை விழுந்துவிட்டது. அதனால் தண்ணீர் சரியாகப் பெருக வில்லை. இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் தவறான

தகவலை அரசுக்கு தந்திருக்கிறார்கள் ஆகவே இப்படிப் பட்ட பெரிய இழப்பு அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மராமத்து வேலைகள் ஏற்கனவே செய்யப்பட்டு நல்ல நிலைமையிலே கண்காணிக்கப்பட்டு வருவதாக தலைமை பொறியாளர் அவர்கள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். மேலும் கடந்த வெள்ளத்தில் 4-வது, 5-வது மடைகள் பாதிக்கப்பட்டு, அதற்காக 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அந்த இடத்திலே மீண்டும் ஓட்டை விழுந்திருக்கிறது என்ற நிலை ஏற் பட்டால் அது கண்டிப்பாகக் கவனிக்கப்படும். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொய்யான தகவல்களைக் கொடுத் திருப்பார்களேயானால் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் மானியக் கோரிக்கைகள் 29, 30 தேதிகளில் வர இருக்கின்றன. அப்போது இது போன்றவைகளை எடுத்துச் சொன்னால் உடனடி யாக கவனிக்கிறோம் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் கோரல்.

(ஆ) அறிவிப்பு கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 184-வது விதியின்கீழ் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக் கிறேன். அதாவது கேரளா ஹைகோர்ட்டின் தீர்ப்பில் அடிப்படையில்தான் புரட்சித் தலைவர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்னார்கள், இது டெலிபரேட் மிஸ் லீடிங் ஆகாதா? மிஸ்ட அப்ளிகேஷன் ஆகாதா? ஆகவே இது குறித்து நான் ஒரு உரிமைப்பிரச்சினை கொடுத்திருக்கிறேன், அதை எழுப்புவதற்கு அனுமதி வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது தான் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். பிறகு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.